வடக்கு வீதி இணைப்பு செயற்திட்டம் - மேலதிக நிதியளிப்பு - மாகாண கூறின் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2012 நவம்பர் 19 ஆந் திகதிய 2890 - எஸ்ஆர்ஐ(எஸ்எவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 4.04 ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சு தற்போதைய உள்நாட்டு மற்றும் உள்நாட்டு விவகார, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்று முகவராகவும் வட மாகாண சபையின் மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களம் மற்றும் வடமத்திய மாகாணத்தின் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவர்களாகவும் உள்ளன. வடமத்திய மாகாணத்திற்குள்ளும் இலங்கை வடபிராந்தியத்திற்கும் தென் பிராந்தியத்திற்கும் இடையேயும் வீதி இணைப்புக்களை மேம்படுத்துவதே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 4,600 மில்லியனுக்குச் சமமான யு.எஸ்.டொலர் 34 மில்லியனாக இருந்தது. அதில் ரூபா 4,058 மில்லியனுக்குச் சமமான யு.எஸ்.டொலர் 30 மில்லியனை நிதியளிப்பதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி உடன்பட்டிருந்தது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2013 மே 31 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2018 யூலை 30 அளவில் பூர்த்தி செய்வதற்கு பட்டியல் படுத்தப்பட்டிருந்தது. எனினும், செயற்திட்ட காலம் 2019 திசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இணைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களானது எனது அறிக்கையின் 2.1 ஆம் அட்டவணையில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலைமையினை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றலினையும் அதன் காசுப்பாய்ச்சலினையும் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.5 நிதிக்கூற்றுக்கனுக்கான முகாமைத்துவத்தினதும் அவ்ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, செயற்திட்டத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

செயற்திட்டத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுவதற்கு செயற்திட்டம் வேண்டப்படுகின்றது.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு செயற்திட்டத்தின் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் முகாமைத்துவத்திற்கு அறிவிக்கப்பட்டது.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு விடயம் | தொகை<br>ரூபா. மில்லியன் | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| செயற்திட்ட காலப்பகுதி 2017 திசெம்பரில் முடிவடைந்ததுடன் நிறைவேற்று மற்றும் அமுலாக்கல் முகவர்களுக்கு சொத்துக்களையும் பொறுப்புக்களையும் கையளித்து செயற்திட்டத்தின் செயற்பாடுகளைக் கலைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | | நிதிக் கூற்றுக்களின் தவறான பிரதிநிதித்துவம் | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | செயற்திட்ட செயற்பாடுகள் முடிவடைந்ததும் அல்லது செயற்திட்ட காலம் முடிவடைந்ததும் கலைத்தல் கணக்குகள் தயாரிக்கப்படுதல் வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் சிபார்சுகள் |
|---|---|---|---|
| ரூபா 1,441.41 மில்லியன் உடன்பட்ட மொத்தக் கிரயத்தை மிகைத்து வத்தாபளை - கேப்பாபிலவு - புதுக்குடியிருப்பு, கிரிகட்டுவெவ - பண்டாரஉல்பத - கபுகொல்லேவ, அதகட - அடம்பகஸ்கட - தோனிகல மற்றும் கிரிகொல்லேவ - ஹிரலுகம வீதிகளின் புனரமைப்பு மீதான ஒப்பந்தங்கள் தொடர்பாக ரூபா 1,553.50 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | செயற்திட்டத்தால் வழங்கப்பட்ட ஒப்பந்தங்களின் மேற்பார்வை மீதான பலவீனங்களின் காரணமாக செயற்திட்டத்தின் கிரயம் ரூபா 92.13 மில்லியனால் அதிகரித்தல். | விலை மாற்றங்கள் மற்றும் அதன் மீது செலுத்த வேண்டியிருந்த வரிகளின் காரணமாக ஒப்பந்தங்களின் கிரயம் அதிகரிக்கப்பட்டிருந்தது. | செயற்திறனின்மையைக் குறைக்கும் வகையில் ஒப்பந்தத்தின் மேற்பார்வையை வலுப்படுத்துதல் வேண்டும். |